ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 3.6 – நாவலம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.6 – நாவலம்

‡ நாவலம் பெரிய தீவினில் வாழும் ⋆
நங்கைமீர்கள் ! இதோர் அற்புதம் கேளீர் ⋆
தூ வலம்புரி உடைய திருமால் ⋆
தூய வாயில் குழல் ஓசை வழியே ⋆
கோவலர் சிறுமியர் இளங்கொங்கை குதுகலிப்ப ⋆
உடல் உள் அவிழ்ந்து ⋆
எங்கும் காவலும் கடந்து கயிறுமாலை ஆகி ⋆
வந்து கவிழ்ந்து நின்றனரே ॥ **3.6.1** ॥

இட அணரை இடத் தோளொடு சாய்த்து ⋆
இருகை கூடப் புருவம் நெரிந்தேற ⋆
குடவயிறு பட வாய் கடை கூடக் ⋆
கோவிந்தன் குழல் கொடூதின போது ⋆
மட மயில்களொடு மான் பிணை போலே ⋆
மங்கை மார்கள் மலர்க் கூந்தல் அவிழ ⋆
உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றி ⋆
ஒல்கி ஓடரிக்கண் ஓட நின்றனரே ॥ **3.6.2** ॥

வான் இளவரசு வைகுந்தக் குட்டன் ⋆
வாசுதேவன் மதுரை மன்னன் ⋆
நந்த கோன் இளவரசு கோவலர் குட்டன் ⋆
கோவிந்தன் குழல் கொடூதின போது ⋆
வான் இளம் படியர் வந்து வந்தீண்டி ⋆

மனம் உருகி மலர்க் கண்கள் பனிப்பத் ⋆
தேன் அளவு செறி கூந்தல் அவிழச் ⋆
சென்னி வேர்ப்பச் செவி சேர்த்து நின்றனரே ॥ **3.6.3** ॥

தேனுகன் பிலம்பன் காளியன் என்னும் ⋆
தீப்பப் பூடுகள் அடங்க உழக்கிக் ⋆
கானகம் படி உலாவி உலாவிக் ⋆
கருஞ்சிறுக்கன் குழல் ஊதின போது ⋆
மேனகையொடு திலோத்தமை அரம்பை ⋆
உருப்பசியரவர் வெள்கி மயங்கி ⋆
வானகம் படியில் வாய் திறப்பின்றி ⋆
ஆடல் பாடல் அவை மாறினர் தாமே ॥ **3.6.4** ॥

முன் நரசிங்கமதாகி ⋆
அவுணன் முக்கியத்தை முடிப்பான் மூவுலகில் மன்னர் அஞ்ச ⋆
மதுசூதனன் வாயில் குழலின் ஓசை ⋆
செவியைப் பற்றி வாங்க ⋆
நன் நரம்புடைய தும்புருவோடு ⋆
நாரதனும் தம் தம் வீணை மறந்து ⋆
கின்னர மிதுனங்களும் தம் தம் கின்னரம் ⋆
தொடுகிலோம் என்றனரே ॥ **3.6.5** ॥

செம் பெருந் தடங்கண்ணன் திரள் தோளன் ⋆
தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம் ⋆
நம் பரமன் இந்நாள் குழல் ஊதக் கேட்டவர்கள் ⋆
இடர் உற்றன கேளீர் ⋆
அம்பரம் திரியும் காந்தப்பர் எல்லாம் ⋆
அமுத கீத வலையால் சுருக்குண்டு ⋆

நம் பரம் அன்றென்று நாணி மயங்கி ⋆
நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே ॥ **3.6.6** ॥

புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர் ⋆
பூணி மேய்க்கும் இளங்கோவலர் கூட்டத்தவையுள் ⋆
நாகத்தணையான் குழல் ஊத ⋆
அமரலோகத்தளவும் சென்றிசைப்ப ⋆
அவியுணா மறந்து வானவர் எல்லாம் ⋆
ஆயர் பாடி நிறையப் புகுந்தீண்டி ⋆
செவி உணாவின் சுவை கொண்டு மகிழ்ந்து ⋆
கோவிந்தனைத் தொடர்ந்தென்றும் விடாரே ॥ **3.6.7** ॥

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் ⋆
செங்கண் கோடச் செய்ய வாய் கொப்பளிப்ப ⋆
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக் ⋆
கோவிந்தன் குழல் கொடூதின போது ⋆
பறவையின் கணங்கள் கூடு துறந்து ⋆
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப ⋆
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக் ⋆
கவிழ்ந்திறங்கிச் செவி ஆட்டகில்லாவே ॥ **3.6.8** ॥

திரண்டெழு தழை மழை முகில் வண்ணன் ⋆
செங்கமல மலர் சூழ் வண்டினம் போலே ⋆
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த முகத்தான் ⋆
ஊதுகின்ற குழல் ஓசை வழியே ⋆
மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து ⋆
மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர ⋆

இரண்டு பாடும் துலுங்காப் புடை பெயரா ⋆
எழுது சித்திரங்கள் போல நின்றனவே ॥ **3.6.9** ॥

கருங்கண் தோகை மயில் பீலி அணிந்து ⋆
கட்டி நன்குடுத்த பீதக ஆடை ⋆
அருங்கல உருவின் ஆயர் பெருமான் ⋆
அவன் ஒருவன் குழல் ஊதின போது ⋆
மரங்கள் நின்று மது தாரைகள் பாயும் ⋆
மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும் ⋆
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கி ⋆
அவை செய்யும் குணமே ॥ **3.6.10** ॥

‡ குழல் இருண்டு சுருண்டேறிய குஞ்சிக் ⋆
கோவிந்தனுடைய கோமள வாயில் ⋆
குழல் முழைஞ்சுகளின் ஊடு குமிழ்த்துக் ⋆
கொழித்திழிந்த அமுதப் புனல் தன்னை ⋆
குழல் முழவம் விளம்பும் புதுவைக் கோன் ⋆
விட்டுசித்தன் விரித்த தமிழ் வல்லார் ⋆
குழலை வென்ற குளிர் வாயினராகிச் ⋆
சாது கோட்டியுள் கொள்ளப் படுவாரே ॥ **3.6.11** ॥

அடிவரவு — நாவலம் இட வான் தேனுகன் முன் செம் புவியுள் சிறு திரண்டு கரும் குழல் ஐய

நாவலம் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்